BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் நகரில் அதிவிரைவான வேகத்தை சகித்துக்கொள்ள முடியாது

***சாலைப் பாதுகாப்பினை அதிகரிப்பதற்கான ஒரு தீர்மானத்திற்கு ப்ராம்ப்ட்டன் நகர்மன்றம் ஒப்புதல் வழங்கியது***

ப்ராம்ப்ட்டன், ON (ஜூலை 13, 2020) – ஜூலை 8 ஆம் தேதி நகர்மன்றமானது, தானியங்கு வேகக் கட்டுப்பாட்டு அமல்படுத்தலை [Automated Speed Enforcement (ASE)] நடைமுறைப்படுத்த ஏகமனதாக ஒப்புதல் அளித்தது; இது அதிவிரைவாக செல்லுதல், மற்றும் போக்குவரத்து தொடர்பான விபத்து சம்பவங்களைக் குறைப்பதற்காகவும், ப்ராம்ப்ட்டன் நகரின் சாலைப் பயன்பாட்டாளர்கள் அனைவருக்குமான பாதுகாப்பை மேம்படுத்தவும், ஆண்டுதோறும் 200 அமைவிடங்களில் நடைமுறைப்படுத்தப்படும்.

தற்சமயம், இந்த ASE அறிவிப்புக் குறிகள் ஐந்து இடங்களில் உள்ளன; அவற்றில் செப்டம்பர் 2020 வாக்கில் கேமிராக்கள் பொருத்தப்படும்.:

- வார்டு 1: வோட்டன் ஸ்ட்ரீட் கிழக்கு (கென்னடி ரோட் மற்றும் சென்டர் ஸ்ட்ரீட் - க்கு இடையில்)
- வார்டு 2: ரிச்வேல் ட்ரைவ் நார்த் (கென்னடி ரோட் மற்றும் சாண்டல்வுட் பார்க்வே -க்கு இடையில்)
- வார்டு 3: ரே லாஸன் புலிவார்டு (ஹுரொன்ட்டோரியோ ஸ்ட்ரீட் மற்றும் மெக்லாலின் ரோட் -க்கு இடையில்)
- வார்டு 8: அவொண்டேல் புலிவார்டு (ப்ரமீலியா ரோட் மற்றும் பிர்ச்பேங்க் சாலை -க்கு இடையில்)
- வார்டு 9: ஃபெர்ன்ஃபாரஸ்ட் ட்ரைவ் (பொவைய்ர்ட் ட்ரைவ் மற்றும் சாண்டல்வுட் பார்க்வே - க்கு இடையில்)

நகர நிர்வாகமானது, 25 சமுதாய பாதுகாப்பு மண்டலங்களை செப்டம்பர் 2020 வாக்கில் அமைக்கவிருக்கிறது. நகரின் ஊடாக ASE க்கு ஆதரவாக இருக்கும் வகையில், பணியாளர்கள் கூடுதல் கேமிராக்களை கொள்முதல் செய்யத் துவங்குவார்கள். இந்தக் கொள்முதலானது, இந்த வருட இறுதியில் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சியாக, ASE நடைமுறையில் இருக்கிறது என்றும், மற்றும் அதிவேகமாக செல்வது சமுதாயத்தில் சகித்துக்கொள்ளப்படுவதில்லை எனவும் வாகன ஓட்டிகளுக்கு அறிவுறுத்தும் வகையில், அறிவிப்புக் குறிகள் நகரின் நுழைவுப் பகுதியில் நிறுவப்படும்.

**பின்புலம்**

- ASE, இது பிரதேச ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்டு பங்குபெறும் நகராட்சிகளினால் சட்ட வடிவாக்கப்பட்டு, உள்ளூர் சமுதாயத்தினருக்கான –குறிப்பாக விபத்து சம்பவங்களுக்கு அதிகம் ஆட்பட்டுவிடக்கூடிய குழந்தைகள் போன்ற சாலைப் பயனாளர்களுக்கான – பாதுகாப்பு மற்றும் வசதியை அதிகரிப்பதில் கவனம் செலுத்துகிறது.
- ASE என்பது தன்னிக்கமாக இயங்கும் ஒரு சாதன கட்டமைப்பு; இது வேகக் கட்டுப்பாடுகளை அமல்படுத்துவதற்கான 'வேகம் அளவெடுக்கும்' கருவி மற்றும் ஒரு கேமிராவை உபயோகிக்கிறது.
- பள்ளிகள் இருக்கும் பகுதி மற்றும் சமுதாய மக்களுக்கான பாதுகாப்பு தேவைப்படும் பகுதிகளில், குறித்த வேகத்திற்கும் கூடுதலான வேகத்தில் செல்லும் வாகனங்களை மட்டுமே ASE படம் பிடித்து பதிவு செய்துகொள்கிறது. ஓட்டிச்செல்பவர் யார் என்பது ஒரு பொருட்டில்லாமல் அதிவேகமாக செல்லும் வாகனத்தின் எண்ணுக்குரியவர் பெயரில் அபராத-அறிவிப்புச்சீட்டு வழங்கப்படுகிறது.
- சட்ட வடிவானது, பள்ளிகள் இருக்குமிடங்கள் மற்றும் சமுதாயத்திற்கான பாதுகாப்பு தேவைப்படும் பகுதிகளில், மற்றும் 80 கி மீ க்கும் குறைவான வேகத்தில் வாகனங்கள் செல்ல வேண்டிய பகுதிகளில், ASE யைப் பொருத்த அனுமதிக்கிறது.
- ASE யைப்பொருத்துவதில் ப்ராம்ப்ட்டன் நகராட்சி மன்றம்தான் 2019, டிசம்பர் 19 ஆம் தேதியிலேயே தனது முதலாவது அறிவிப்புக்குறியை நிறுவி அறிமுகம் செய்த, ஒன்ட்டேரியோ பிரதேசத்தில் உள்ள, முதலாவது நகராட்சியாகும்.

ASE பற்றிய கூடுதல் தகவல்களுக்கு, இங்கே க்ளிக் செய்யவும்

**அறிஞர் கூற்றுக்கள்**

“ப்ராம்ப்ட்டனில் அதிவேகமாக வாகனம் ஓட்டுவதை முற்றிலும் சகிக்க இயலாது; இந்தச் செய்தியை தெளிவாக எடுத்துச் சொல்வதற்காக, நமது நகரமன்றம் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும். நமது நகரம் முழுவதிலுமாக 200 இடங்களில் தானியங்கி வேகக் கட்டுப்பாட்டை அமலாக்கம் செய்வதை அதிகரிப்பது போன்ற நடவடிக்கைகளின் மூலம், வாகன விபத்து சம்பவங்களை குறைப்பதற்கும், அனைத்து சாலை பயனாளிகளுக்கும், குறிப்பாக அதிகம் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கான பாதுகாப்பை அதிகரிப்பதற்கும் நாங்கள் பணியாற்றி வருகிறோம். ”

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்ட்டன் நகரில் ASE அமைப்பதற்கான கூடுதல் இடங்களை அங்கீகரிப்பதன் மூலம், நமது சமூகத்தில் அதிவேகத்தை சகித்துக்கொள்ள முடியாது என்பதையும், சாலையை எல்லோருக்குமாகப் பகிர்ந்து கொள்வதை நினைவில் கொள்ள வேண்டும் என்பதையும் அனைத்து வாகன ஓட்டிகளுக்கும் சமிக்ஞை செய்கிறோம். இந்த ஆண்டு வோட்டன் ஸ்ட்ரீட்-இல், ASE அறிமுகம் செய்யப்பட்டதைத்

தொடர்ந்து, பாதுகாப்பான, செயல்பாட்டில் இருக்கின்றபடியான, போக்குவரத்தை ஊக்குவிக்கவும் மற்றும் ஆதரிப்பதற்காகவும், அருகாமையில் இடையிடையேயான இருசக்கர (மோட்டார் பைக்) வாகன பாதைகளையும் நகர் மன்றம் அறிமுகப்படுத்தியது. மக்களுக்கான வீதிகளை உருவாக்குவதே எங்கள் முன்னுரிமையாகும், இப்படியாக ப்ராம்ப்ட்டன் நகரவாசிகள் அனைவரும் பாதுகாப்பாக போக்குவரத்து செய்யலாம்!

*- பால் வின்செண்ட், ரீஜனல் கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; தலைமைப் பொறுப்பு, பொதுப்பணி மற்றும் பொறியியல் துறை, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“தானியங்கு வேகக் கட்டுப்பாட்டு அமலாக்கம் என்பது, நாம் அனைவரும் வேகத்தைக் குறைக்க வேண்டும் என்பதையும், நமது சமூகங்களை பாதுகாப்பாக வைத்திருப்பதில் நாம் அனைவரும் செயல்பாட்டுரீதியாக பங்கு வகிக்கிறோம் என்பதையும் நினைவூட்டுவதற்கேயாகும். ASE ஐ அறிமுகப்படுத்திய முதல் நகரங்களில் ஒன்றாக இருக்கும் நாம், நமது குடியிருப்பாளர்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்புதான் முன்னுரிமை கொண்ட விஷயமாக கருதப்படுகிறது என்பதை நாங்கள் எடுத்துக் காட்டுகிறோம். ”

*- பேட் ஃபோர்ட்டினி, பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 7 & 8; துணைத்தலைவர், -பொதுப்பணி மற்றும் பொறியியல் துறை, ப்ராம்ப்ட்டன் நகரம்*

”நமது சாலைகள், பக்கவாட்டு நடைபாதைகள் மற்றும் போக்குவரத்து அமைப்புகள் பாதுகாப்பாகவும் திறமையாகவும் செயல்படுவதை உறுதி செய்வதில் நமது சாலைகள் பராமரிப்பு மற்றும் போக்குவரத்து சேவைகள் குழு ஒரு அத்தியாவசியமானதும் மற்றும் சிக்கலானதுமான பங்கினை ஆற்றுகிறது. கோவிட்-19 தொற்று பரவலுக்கு முன்னும், அதற்குப்பின்னரும், நமது சமூகத்தின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும் ஆதரிப்பதற்கும் தானியங்கி வேகக் கட்டுப்பாட்டினை அமலாக்கம் செய்வதில் எங்கள் ஊழியர்கள் திரைக்குப் பின்னால் பணியாற்றி வருகின்றனர். ”

*- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

BRAMPTON

Media Release

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் பரிமாற்றம்
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca